2015 ஆகஸ்ட் 25]

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கோட்டம் வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். தனிக் கோட்டம் பிரிக்க வேண்டும் என்று சொன்னால் ஏற்கெனவே இருக்கின்ற கோட்டத்தில் எவ்வளவு கிலோ மீட்டர் நீள சாலைகள் இருக்கின்றன என்பதைக் கணக்கிட்டு, அதற்கேற்பதான் கோட்டம் பிரிக்க முடியும். அதை ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல அதிகமான கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் அங்கே இருப்பின், அதைப் பிரிப்பதற்கு அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 123, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

123—

தொழிற்பேட்டை

***53015—திரு. மு. முருகன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதுகுளத்தூர் தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் தொகுதியில் தொழிற்பேட்டை அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள்.*

முற்பகல் 10–15

திரு. மு. முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆராதனைக்குரிய தெய்வமே, உலகிலேயே மின் உற்பத்தியில் சாதனை படைத்த மின் சக்தித் தாயே, அரசியலின் நிறைகுடமே, தமிழக மக்கள் சூடிய மணிமகுடமே, (மேசையைத் தட்டும் ஒலி) உலகின் எட்டாம் அதிசயமே, தீயசக்தியின் சிம்மசொப்பனமே, தமிழக முன்னேற்றத்தின் முகவரியே, ஆர்.கே. நகர் தேர்தல்மூலம் இனி எவரும் எட்டமுடியாத வெற்றியைப் பெற்ற எங்கள் இமயமே, (மேசையைத் தட்டும் ஒலி) பாலூட்டும் தாய்மார்களுக்கு தனி அறை தந்த எங்கள் தங்கத்தாரகையே, (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் இதய தெய்வம் புரட்சித் தலைவி தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன். எனது சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கமுதியில் உலகிலேயே முதன்முதலாக மிகப்பெரிய அளவில் சூரிய மின் உற்பத்தி நிலையங்கள் அமைத்து, 648 மெகாவாட் மின் உற்பத்தி செய்ய ரூ.4,538 கோடி முதலீட்டில் அதானி குழுமத்துடன் மின் சக்தி கொள்முதல் ஒப்பந்தத்தினை ஏற்படுத்தி, எனது தொகுதிக்கு மின் உற்பத்தி நிலையங்களை வழங்கி, மக்களின் வாழ்வில் ஒளியேற்றிய, எங்களின் குலவிளக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதி மிகவும் வறட்சியான பகுதி. இந்த மாவட்டம் முழுவதிலும் கருவேல மரங்கள் அதிகமாக இருப்பதால், இப்பகுதியில் இருக்கக்கூடிய மக்கள் கருவேல மரங்களை வெட்டி மூட்டம் போடும் தொழிலைச் செய்து வருகின்றனர். அவர்களுக்கு வேறு மாற்றுத் தொழில் இன்றி இந்தத் தொழிலையே தொடர்ச்சியாகச் செய்து வருகின்றனர். இந்தத் தொழிலால் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டு மாசு அடைவதோடு மட்டுமல்லாமல், அந்தப் பகுதியில் உள்ள நிலத்தடி நீரும் பாதிக்கப்பட்டு வருங்காலங்களில் தண்ணீரே கிடைக்காத ஒரு சூழ்நிலை உள்ளது. அதனால்,

2015 ஆகஸ்ட் 25]

இப்பகுதி மக்களுக்கு மாற்றுத் தொழிலாக முதுகுளத்தூர் தொகுதியில் சிறு, குறு தொழில் தொடங்குவதற்கு ஒரு தொழிற்பேட்டை அமைத்து அதன்மூலம் இப்பகுதியில் உள்ள சிறு, குறு தொழில் முதலீட்டாளர்களும், படித்த இளைஞர்களும் பயனடையும் வகையில் தொழில் தொடங்கி அதன்மூலம் தங்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்திக்கொள்ள உதவி செய்யவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் இதுவரையிலும் யாரும் அளித்திடாத வகையில் சிறு, குறு தொழில் முனைவோருக்கும், முதலீட்டாளர்களுக்கும் குறைந்த வட்டியில் கடன் உதவி வழங்கப்படுகிறது. மேலும், மானியம் வழங்கி அவர்களின் தொழிலுக்கு பாதுகாப்பும் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, தரணி போற்றும் தங்கத்தாரகை மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியில், முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் வரக்கூடிய காலங்களிலாவது ஆய்வு செய்து ஒரு தொழிற்பேட்டையினை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் முனைவோர்கள் 20 பேர் சேர்ந்து தொழில் தொடங்க முன்வருவார்களேயானால் அந்தப் பகுதி மாவட்ட ஆட்சித் தலைவருடன் கலந்தாலோசிக்கப்பட்டு, சிட்கோ மூலமாக தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும். மேலும், இராமநாதபுரம் மாவட்டத்தினைப் பொறுத்தமட்டில் பரமக்குடியில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் தொழிற்பேட்டை ஒன்றும், கீழநாகச்சியில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் தொழிற்பேட்டை ஒன்றும், உரப்பள்ளியில் 12.14 ஏக்கர் நிலப்பரப்பில் தொழிற்பேட்டையும் ஏற்கெனவே செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 2013–2014 ஆம் ஆண்டில் சர்க்கரைக்கோட்டை என்ற இடத்தில் புதிய தொழிற்பேட்டை ஏற்படுத்தப்படும் என்று அறிவித்து, அதற்காக 100 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு புதிய தொழிற்பேட்டை உருவாக்க முன்மொழிவு அனுமதி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அந்த இடத்தின் உத்தேச நில மதிப்பு செலுத்தப்பட்டு, நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது என்பதனை மாண்புமிகு உறுப்பினர்*

அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதன் மூலமாக தொழில் முனைவோர்கள் அங்கே வருவார்களேயானால் அங்கே தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள்.

திரு. மு. முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கலந்த வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி. இப்பகுதி எந்தத் தொழிலுமே செய்ய முடியாத ஒரு பகுதியாக உள்ளது. சிறு, குறு தொழில்களின் வளர்ச்சிக்காக வரக்கூடிய காலங்களிலாவது அப்பகுதிகளுக்கு நேரில் சென்று ஆய்வு செய்து கட்டாயம் ஒரு தொழிற்பேட்டையினை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொண்டு, அமர்கிறேன்.

முற்பகல் 10—20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்கின்ற வகையிலே அங்கே குழும வளர்ச்சியெல்லாம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதன் மூலமாக 498 இலட்சம் ரூபாயில் பரமக்குடி பகுதியில் ஒரு பொறியியல் குழுமம் ஏற்படுத்தப்பட இருக்கிறது. நம்முடைய தொழில் முனைவோர்கள் பங்குகொள்வார்களேயானால், அங்கே சிறப்பாக தொழிற்பேட்டை அமைக்க ஏதுவாக இருக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 124, மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.